நாள்.17.11.2023

**அசல் வழக்கு எண். 54/2021**

**வா.சா.1 – 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தந்தை விடங்கன் சேர்வைக்கும், எனது சித்தப்பா நடேசன் சேர்வைக்கும் வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டு, எனது சித்தப்பா நடேசன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வீடு கட்டி அவர் இறக்கும் வரை குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் நடேசன் குடியிருந்த வீட்டில் தான் குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2003 ஆம் ஆண்டில் 1, 2 பிரதிவாதிகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டு தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாகம் பிரித்துக் கொண்ட பிறகு, வேறு இடத்திற்கு சென்று குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி அவரது தந்தை காலத்திலிருந்து குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி தந்தை வளர்த்து மரத்தை தான் 2ம் பிரதிவாதி வெட்டியபோது நான் தடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், அந்த புகாரைப் பெற்றுக் கொண்ட காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். ஆய்வாளர் நான்கொடுத்த புகாரைக் பெற்றுக் கொண்டு விசாரணைசெய்த பிறகு உரிமையியல் வழக்காக இருப்பதால் உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி அனுப்பிவிட்டார். என்னிடம் காட்டப்படும் **வா,சா.ஆ 2** ஆவணத்தில் வட்டாட்சியரிடம் பட்டா கேட்டு 50 செண்டுக்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி, 50 செண்டில் என்

தந்தை காலத்திலேயே 22 சென்டை பெருமாள் சேர்வைக்கு விற்பனை செய்த பிறகு நான் எப்படி 50 செண்டுக்கும் பட்டா கேட்டு மனு கொடுத்தேன் என்றால் பட்டாவில் 50 செண்டு இருந்ததால் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ம் 50 செண்டிற்கு பட்டா கேட்டு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ஆவணத்தில் கதவு எண் 3/66 என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ள வீட்டு வரி ரசீதுகள் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் காணாமல் போய்விட்டது, இருந்ததை தாக்கல் செய்துள்ளேன். நானும் என்னுடைய அண்ணனும் பாகம் பிரித்துக் கொண்ட பாகப்பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் என்னுடைய மகன்கள் அந்த பாகப்பத்திரத்தை அடமானம் வைத்து வெளிநாடு சென்றுவிட்டார்கள் , அதனால் அசல் ஆவணத்தை எடுத்துவர இயலவில்லை. 18.05.2012 ல் எனக்கும் எனது அண்ணன் தங்கராசுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி, பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 2 ம் இன சொத்தானது எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும் அதில் புல எண் 139/3A ல் புஞ்செய் ஏக்கர் 1 செண்டு 98 ல் செண்டு 50 ல் மேல்புறம் செண்டு 21 -3/4 போக மீதமுள்ள செண்டு 28-1/4 செண்டில் மேல்புறம் செண்டு 14-1/4 செண்டு எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப் பத்திரம் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. அது **பி.வா.சா.ஆ 1** ஆகும். மேற்படி, பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி 21-3/4 செண்டில் எனது பாகவீதமாக 14-1/4 மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், முழு சொத்தையும் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தால்

மேற்படி, பாகப்பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி, பி,வா,சா ஆ 1 ஆவணத்தில் 3, 4 நபர்கள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். மேற்படி, பி,வா,சா ஆ 1 ஆணத்தில் எனது சகோதரிகளான 3, 4 நபர்களுக்கு அவர்களின் திருமணத்தின்போது சகல சீர்வரிசைகளும் செய்து கொடுத்து திருமணம் செய்து கொடுத்ததால் தாவா சொத்தில் பாகம் ஏதும் வேண்டாமென்று சொல்லிவிட்டதாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையும், அனுபவமும் இல்லையென்றும், தாவா சொத்தில் எனக்கு எந்த விதமான பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

பி,வா,சா ஆ 1 ல் கண்டுள்ள 2 ம் இன சொத்தில் உள்ள 14-1/4 செண்டு தவிர மீதமுள்ள 14-1/4 செண்டை எனது சகோதரிகளுக்கு சீர்வரிசை செய்வதற்காக ஒதுக்கிவைத்துள்ளேன். மேற்படி சொத்தானது எனது அனுபவத்தில் தான் உள்ளது.

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran, B.A., B.L.,

District Munsif, Pattukkottai.